செ.வெ.எண்.56 நாள்.22.12.2017.

## பத்திரிக்கை செய்தி

## தொழில் துவங்க அரசு மானியத்துடன் வங்கிக் கடன் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொழில் முனைவோர்க்கான திட்ட விளக்க முகாம்

தமிழக அரசு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் கொள்கையை வெளியிட்டு மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) புதிய தொழில் முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகியவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டங்களை விளக்கவும், தொழில் கடன் குறித்த அனைத்து விதமான வழிகாட்டுதலை வழங்கிடவும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் தொழில் முனைவோர்க்கான திட்ட விளக்க முகாம் கீழ்கண்ட தேதிகளில் காலை 11.00 மணிக்கு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது

| நாள் | கிழமை | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் |
|---|---|---|
| 27.12.2017 | புதன் | கீழப்பாவூர், மேலநீலிதநல்லூர் |
| 28.12.2017 | வியாழன் | கடையநல்லூர், இராதாபுரம் |
| 29.12.2017 | வெள்ளி | பாப்பாகுடி |
| 02.01.2018 | செவ்வாய் | சேரன்மகாதேவி |

| | | |
|---|---|---|
| 03.01.2018 | புதன் | வாசுதேவநல்லூர், செங்கோட்டை |
| 04.01.2018 | வியாழன் | வள்ளியூர், மானூர். |
| 05.01.2018 | வெள்ளி | அம்பாசமுத்திரம், சங்கரன்கோவில் |
| 08.01.2018 | திங்கள் | களக்காடு, குருவிகுளம் |
| 09.01.2018 | செவ்வாய் | ஆலங்குளம், களக்காடு |
| 10.01.2018 | புதன் | தென்காசி |
| 11.01.2018 | வியாழன் | பாளையங்கோட்டை, கடையம் |

எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற / தேர்ச்சி பெறாத, ஐ.டி.ஐ, டிப்ளமோ மற்றும் டிகிரி தேர்ச்சி பெற்ற தகுதியானவர்கள் மேற்கண்ட திட்ட விளக்க முகாமில் கலந்து கொண்டு தங்கள் விருப்பத்திற்கேற்ற கடன் உதவி திட்டத்தை தேர்வு செய்ய தொழில் ஆலோசனை பெற்று பயனடையுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அழைக்கிறார்.

இது தொடர்பான மேலும் விவரங்களுக்கு திருநெல்வேலி மாவட்ட தொழில் மையத்தை நேரிலோ அல்லது 0462 - 2572162, 2572384 ஆகிய தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொள்ளலாம்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**